

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 355 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 19 – வெள்ளிக்கிழமை 04 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 355: Thiruvalluvar Year - 2054 - Aadi 19 - Friday 04 August 2023 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## மணிப்பூரில் முழு அமைதி திரும்புவதற்கு

# விரைவான நடவடிக்கைக்கு உத்தரவிடுக!



புதுடெல்லியில் குடியரசுத் தலைவரை, "இந்தியா" கூட்டணிக் கட்சித் தலைவர்கள் சார்பில் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் சந்தித்து மணிப்பூர் கலவரம் குறித்த கள ஆய்வறிக்கையை அளித்து மணிப்பூரில் அமைதி திரும்ப நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுத்தனர்.

## குடியரசுத் தலைவரிடம் 'இந்தியா' கூட்டணித் தலைவர்கள் நேரில் வலியுறுத்தல்!

**புதுடெல்லி, ஆக. 4-**

**மணிப்பூரில் மூன்று மாதங்களுக்கும் மேலாக வன்முறை நீடித்து கலவரம் நடந்துகொண்டிருப்பதும் அம்மாநில பா.ஜ.க. அரசும், ஒன்றிய அரசும், காவல் துறையும் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதையடுத்து 'இந்தியா' கூட்டணி கட்சி எம்.பி.க்கள் மணிப்பூர் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அங்குள்ள நிலவரம் குறித்து ஆய்வு செய்ததை தொடர்ந்து நேற்று முன்தினம் காலை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை 'இந்தியா' கூட்டணிக் கட்சித் தலைவர்கள் சந்தித்து, மணிப்பூரில் அமைதி திரும்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.**

மணிப்பூரில் மூன்று மாதங்களுக்கும் மேலாக வன்முறை நீடித்துக் கொண்டிருப்பதும் அம்மாநில பா.ஜ.க. அரசும், ஒன்றிய அரசும், காவல்துறையும் கைகட்டி வேடிக்கை பார்ப்பதும் அனைத்துத் தரப்பினரையும் கவலையுறச் செய்துள்ளது.

இப்பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த ஒன்றிய அரசு மறுத்து வரும் சூழலில் பிரதமரும் அவைக்கு வந்து பதில் அளிக்காமல் புறக்கணித்து வருகிறார்.

இதையடுத்து மணிப்பூருக்கு நேரில் சென்று, முகாம்களில் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த இந்தியா கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் (2.8.2023) காலை குடியரசுத்தலைவர் மாளிகைச் சென்று குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை சந்தித்தனர்.

மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் சரத்பவார், மக்களவை தி.மு.க. குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, ஜெய்ராம்ரமேஷ், டெரிக் ஓ பிரையன், வைகோ, தொல்.திருமாவளவன், ரவிக்குமார் உள்ளிட்ட இந்தியா கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர்கள் மற்றும் எம்.பி.க்கள் 31 பேர் குடியரசுத்தலைவரைச் சந்தித்து, மணிப்பூர் கொடூரம் குறித்த தங்களது கள ஆய்வு அறிக்கையை அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர்கள், பற்றி எரியும் மணிப்பூரில் அமைதி திரும்ப தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு உடனே எடுக்க ஆவன செய்யுமாறு குடியரசுத்தலைவரை கேட்டுக்கொண்டதாக தெரிவித்தனர்.

### மல்லிகார்ஜுன கார்கே பேட்டி!

குடியரசுத் தலைவரைச் சந்தித்தபின் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே அளித்த பேட்டி வருமாறு:-

இந்தியா கூட்டணியைச் சேர்ந்த 31 எம்.பி.க்கள் குடியரசுத்தலைவரை சந்தித்தோம்/ மணிப்பூர் வன்முறை தொடர்பான முழு விபரங்களையும் குடியரசுத்தலைவரிடம் தெரிவித்தோம்.

இப்பிரச்சினை தொடர்பாக மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வருகிறோம். மாநிலங்களவையில் பிரிவு 267ன் கீழ் தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்க கோரி வருகிறோம்.

ஆனால் அரசு இரு அவைகளிலும் அதனை ஏற்காமல் நிராகரித்து வருகிறது.

மணிப்பூரில் மெய்த்தி, குக்கி சமூக மக்கள் இடையே வன்முறை நடந்து வருகிறது. அங்கு அமைதி திரும்ப பிரதமர் மோடி நேரடியாக மணிப்பூர் செல்ல வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அவர் விளக்கம் அளிக்காமல் பல்வேறு இடங்களுக்கும் சென்று உரையாற்றி வருவது வேதனைக்குரியது.

நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் இல்லாத நிலை உருவாகி உள்ளது. மணிப்பூர் விவாகரத்துக்கு தீர்வுகாண குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்துள்ளோம். மாநிலங்களவையில் விதி எண் 267ன் கீழ் விவாதம் நடந்த எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றனர். விதி எண் 267ன் கீழ் விவாதம் நடத்த ஆளுங்கட்சியினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். மணிப்பூர் குறித்து விவாதிக்க மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

### கலவரத்துக்கு காரணமானவர்களை தண்டிக்க வேண்டும்!

மணிப்பூர் அமைதியை நிலைநாட்ட குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 3 மாதங்களாக நடைபெற்ற கலவரத்துக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். மணிப்பூரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒன்றிய, மாநில அரசு உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மல்லிகார்ஜுன கார்கே கூறினார்.

**மணிப்பூர் அமைதியை நிலைநாட்ட குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 3 மாதங்களாக நடைபெற்ற கலவரத்துக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். மணிப்பூரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒன்றிய, மாநில அரசு உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

---

## ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை 2023 சென்னை!

# போட்டிக்கான 'பாஸ் தி பால்' சுற்றுப்பயண கோப்பை!

### முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கப்பட்டது! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!




**சென்னை, ஆக. 4-**

**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.8.2023) தலைமைச் செயலகத்தில், 7-வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023 சென்னை" போட்டிக்கான "பாஸ் தி பால் - கோப்பை" சுற்றுப்பயணம் கன்னியாகுமரியில் இருந்து தொடங்கி ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று சென்னை வந்தடைந்ததையொட்டி அக்கோப்பையை சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம் அவர்கள் வழங்கினார்.**

7–வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை – 2023 சென்னை" போட்டி ஆகஸ்ட் 3 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை சென்னையில் நடைபெறவுள்ளது. ஹாக்கி இந்தியாவுடன் இணைந்து தமிழ்நாடு அரசு நடத்தவுள்ள இந்தப் போட்டியில், இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான் மற்றும் கொரியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்கின்றன. 16 ஆண்டுகளுக்குப் பிறகு இப்புகழ்பெற்ற ஹாக்கிப் போட்டி சென்னையில் மீண்டும் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் சர்வதேச அளவிலான இப்போட்டியினை சிறப்பாக நடத்துகின்ற வகையில், 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம் (Upgraded Hockey Stadium), ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் (Olympic Standard New Synthetic Turf) மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் (Kalaignar Centenary Pavilion) ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.7.2023 அன்று திறந்து வைத்தார்.

"ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை – 2023 சென்னை" போட்டி நடைபெற உள்ளதையொட்டி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் 20.7.2023 அன்று சென்னை மெரினா கடற்கரையில் போட்டிக்கான கோப்பை அறிமுகம் செய்யப்பட்டு, "பொம்மன்" இலச்சினையை வெளியிட்டார்.

மேலும், ஆசிய ஹாக்கி கோப்பையினை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கொண்டு செல்கின்ற வகையில் "பாஸ் தி பால்" கோப்பை (PASS THE BALL TROPHY TOUR) சுற்றுப் பயணத்தை தொடங்கி வைத்தார்.

"பாஸ் தி பால் – கோப்பை" சுற்றுப்பயணம் கன்னியாகுமரியில் இருந்து தொடங்கி ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று 1.8.2023 அன்று சென்னை வந்தடைந்தது. இந்த கோப்பையை சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம் அவர்கள் நேற்று முன்தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் திர்கி, பொதுச் செயலாளர் போலா நாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், செயல் இயக்குநர் காமாண்டர் ஆர்.கே. ஸ்ரீவஸ்தவா, ஆசிய ஹாக்கி சம்மேளனத்தின் நிர்வாகி தைமூர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

# தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

### இராமநாதபுரத்தில் ஆக.17ல் நடைபெறுகிறது! கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 4-**

**முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றும் தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம் இராமநாதபுரத்தில் ஆகஸ்ட் 17 அன்று நடைபெறுகின்றது என்று கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22.3.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல்" உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு, முதலாவதாக கடந்த ஜூலை 26 அன்று திருச்சியில் டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து;

தென் மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் **"வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்"**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்